**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 15.07.2025**

**O.S. 46/2020**

**வா.சா. 2** – **பாலஜனாதிபதி**

**1, 2 மற்றும் 4 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் வாதி என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது நான் சாட்சி தான். இந்த வழக்கில் 2 ம் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணத்தை நான் பார்த்துள்ளேன் அதன் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் பிராது மற்றும் எதிர்உரையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படி தாமரைகுளம் வடக்கு வில்லேஜ் ரிசர்வே எண். 273 க்கு 1 ஹக்டர் 98.50 ஏர் விஸ்தீரணம் என்றால் சரிதான். இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள ரீசர்வே எண். 273/17 மற்றும் 273/18 என்றால் சரிதான் மேற்படி சொத்தில் எனக்கும் அவகாசம் உண்டு.

வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 பட்டாவின் படி ரீசர்வே எண். 273/17 மற்றும் 273/18 வேறு நபர்களுக்கும் உரிமைப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதில் குறிப்பிடப்பட்டநபர்கள் குடும்பத்தார்கள். வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ல் 1ம் வாதி மற்றும் எனது பெயரை தவிர மற்ற வாதிகளின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் ஆனால் அதில் குறிப்பிட்டுள்ள பையன் செல்லராஜ் மகன்கள் தான் பையன் கிருஷ்ணராஜ் உள்ளிட்ட இதர வாதிகள். நானும் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை 1ம் வாதியை தவிர வேறு உரிமையாளர்களும் தரப்பினர்கள் இல்லை என்றால் 2 முதல் மற்ற வாதிகளின்

தகப்பனாரின் பெயர் பட்டாவில் இடம்பெற்றுள்ளது. வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 பட்டாவில் குறிப்பிட்டுள்ள பையன் செல்லராஜின் வாரிசுதாரர்கள் வழக்கின் 2 முதல் 5 வாதிகள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

வா.சா.ஆ.9 ஆவணத்தில் 13 நபர்களின் பெயர்கள் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ல் 19 நபர்களின் பெயர்கள் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றும் 10 ல் குறிப்பிட்டுள்ள நபர்கள் பையன் செல்லராஜின் வாரிசுகள் என்பது பொய் என்றால் சரியல்ல அவர் அண்ணன் என்பதால் எனக்கு தெரியும். இந்த வழக்கின் பிராதில் வழக்கு பட்டிகை சொத்தின் எல்கை குறித்த விபரம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 5 லும் எல்கை குறித்த விபரம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 5 ல் பழைய சர்வே எண் குறித்த விபரம் இல்லை என்றால் சரியல்ல குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய சர்வே எண் என்ன என்றால் 3208. வா.சா.ஆ.4 மற்றும் 5 ல் பழைய சர்வே எண் எங்கு குறிப்பிட்டுள்ளது என்றால் என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை.

வா.சா.ஆ.5 ல் பழைய சர்வே எண். 3207 ஏ, பி, சி குறிப்பிடப்பட்டிருப்பதாக சொல்லியுள்ளது என்றால் அது சரியா தவறா என்றால் சரிதான். ரீசர்வே எண்.273/17 மற்றும் 273/18 ற்கும் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் 3208 மற்றும் வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் ஆகும். பழைய சர்வே 3207-ஏ, பி, சி-க்கும் மற்றும் ரீசர்வே எண்.273/17 மற்றும் 273/18 ற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பழைய சர்வே எண். 3208/1 க்கு ரீசர்வே எண்.273/1 part, 2, 13, 14, 17, 18 part என்றால் சரிதான் இவைகளையும் உள்ளடக்கியது, ரீசர்வே

எண்.273/17 மற்றும் 273/18 ம் பழைய சர்வே எண். 3208/1 ல் உள்ளடக்கியது. பழைய சர்வே எண். 3208/2 க்கு ரீசர்வே எண். 273/1 part, மற்றும் 18 part என்றால் சரிதான் இதுவும் எங்களுக்கு அவகாசப்பட்டது. ரீசர்வே எண். 273/2 ல் சாமிதோப்புபதி (கோவில்) உள்ளது என்றால் சரிதான். மேற்படி சாமிதோப்பு கோவிலில் விழா சமயங்களில் வெளியூரில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் வருவார்கள் என்றால் சரிதான்.

மேற்படி சாமிதோப்பு கோவிலில் விழா சமயங்களில் சாமிதோப்பு பதியை சுற்றி கோவிலின் தேரானது ரீசர்வே எண். 273/17 ல் உள்ள பொது பாதை வழியாக தான் தேர் பதியை சுற்றி வரும் என்றால் சரியல்ல அது பொதுபாதையல்ல எங்களுடைய பட்டா சொத்து பதியின் நிர்வாகத்தை நாங்களும் கவனித்து வருவதால் அதற்கு ஏதுவாக கட்டமைத்து வைத்திருக்கிறோம் எனவே ரீசர்வே எண். 273/17 ல் உள்ள எங்களுடைய பட்டா சொத்தில் தான் தேர் சுற்றி வரும். மேற்படி ரீசர்வே எண். 273/17 பாதையிலிருந்து வேறு ஊர்களுக்கு இதர பாதைகள் செல்கிறது என்றால் சரியல்ல அது எங்களுடைய பட்டா சொத்து. ரீசர்வே எண். 273/17 ஐ யாரும் ஆக்கிரமிப்பு செய்ய உரிமை இல்லை என்றால் சரிதான் அது என்னுடைய சொத்து. ரீசர்வே செட்டில்மெண்ட் அனைத்தும் 1971 முதல் 1975 க்குள் முடிந்தது என்றால் சரிதான் நாங்கள் தாக்கல் செய்த ஆட்சேபணை தற்போது வரையிலும் கோப்புக்கு எடுக்கவில்லை.

நாங்கள் தாக்கல் செய்த ஆட்சேபணை யின் வருடம் என்ன என்றால் எங்கள் முன்னோர்கள் கொடுத்தது அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆட்சேபனைணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் அது எங்கே

இருக்கிறது என்பது குறித்து எனக்கு தெரியாது. ரீசர்வே செற்றில்மெண்ட் காலத்தில் ஆ-பதிவேட்டில் ரீசர்வே எண்.273/17 க்கு நிலவியல் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல அது எங்களுக்கு தெரியாமல் அறிவிப்பு கொடுக்காமல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நிலவியல் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ள விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் சமீப காலத்தில் எங்களின் மண்அரிப்பு சுவரை இடிக்க வந்தபோது தெரியும். ஆ-பதிவேட்டில் ரீசர்வே எண்.273/17 க்கு நிலவியல் பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் மேற்படி பாதையை பொதுமக்கள் உபயோகித்து வந்ததால் நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**என்னிம் காட்டப்படும் கடிதம் 10.02.2020 ம் வருடம் வட்டார வளர்ச்சி அதிகாரிக்கு நான் அனுப்பிய கடிதத்தின் நகல் என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.1 ஆக எதிர்தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**.

மேற்படி பி.வா.சா.ஆ.1 நகலில் இருக்கும் கையொழுத்து என்னுடையது தான் அதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் நான் தயார் செய்தது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.1 நகலின் இரண்டாவது பக்கத்தில் முதல் பாராவில் நான்காவது லைனில் "நீங்கள் குறிப்பிடும் தடுப்பு சுவர் எந்த விதத்திலும் பாதிக்காது என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல அதற்கு முன்பு இருக்கும் வரிகளையும் சேர்த்து படித்தால் அதற்கான விபரம் தெரியும். மேற்படி பி.வா.சா.ஆ.1 நகலின் மூன்றாவது பக்கத்தில் முதல் வரியில் சுமார் 60 அடி தூரத்திற்கு இடித்து சேதம் செய்து ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்து என்றால் சரிதான் மேற்படி தடுப்புசுவருக்கு இரண்டு பக்கமும் இருக்கும்

இடங்களும் என்னுடையதும் எங்கள் குடும்பத்தாருடையதும்.

மேற்படி பி.வா.சா.ஆ.1 நகலின் குறிப்பிட்டுள்ள சேதத்திற்கும் நஷ்டத்திற்கும் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை இடிப்பதற்கு காரமணமாக இருந்தவர்கள் தெரியாமல் செய்து விட்டோம் என்று மன்னிப்பு கேட்டதால் ஆலயத்தின் நிர்வாகிகள் என்பதால் வழக்கு தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டோம். மேற்படி மன்னிப்பு கேட்டதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் அது என்னிடம் தனிப்பட்ட முறையில் வாய்வழியாக கேட்கப்பட்டது. பி.வா.சா.ஆ.1 நகலில் குறிப்பிட்டுள்ள சேதம், நஷ்டம் அதற்கான மன்னிப்பு குறித்த விபரத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் மேற்படி பி.வா.சா.ஆ.1ற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது. பி.வா.சா.ஆ.1ல் இந்த வழக்கு குறித்தோ இதற்கு முன்பான வழக்கு விபரம் குறித்தோ எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.7 ல் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைகிளை ரீசர்வே எண்.273/17 ல் உள்ள ஆக்கிரமிப்பை உடனடியாக மாற்ற உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் மேற்படி உத்தரவில் 4 வது பாராவில் ரீசர்வே எண்.273/17 ல் உள்ளது பொதுசாலை என்று பொய்யாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் மேற்படி வா.சா.ஆ.7 பொய்யான வழக்கு தாக்கல் செய்து பெறப்பட்ட உத்தரவாகும். ரீசர்வே எண். 273/17 எனக்கு மட்டும் தான் உரிமை என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் வா.சா.ஆ.9 மற்றும் 10 ன் படி அது எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் உரியது என்பது குறித்து தெரியவரும். வா.சா.ஆ.7 ல் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைகிளை உத்தரவின் படி 1, 2, 4 பிரதிவாதிகள் அதனை செயல்படுத்த

வேண்டியது கடமை என்றால் மேற்படி உத்தரவில் பொது சாலை என்பதை குறித்து முடிவெடுத்த பிறகே கடமையை ஆற்றமுடியும்.

ரீசர்வே எண். 273/17 ஐ பொது பாதை என்று சொல்வதாலும் பொது மக்கள் பயன்படுத்தி வருவதாலும் கோவிலின் தேர் அதனை சுற்றி வருவதாலும் வாதிகள் எவ்வித பரிகாரமும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களில் ரீசர்வே எண் 273/17 நிலவியல் பாதை என்று குறிப்பிட்டுள்ளதை திருத்தம் செய்வதை வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1, 2, மற்றும் 4 ம் பிரதிவாதிகள் அசல் வழக்கு எண். 378/2005 மற்றும் CRP No.165/2009 லும் இந்த வழக்கில் உள்ள 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு சாதகமாக நடந்து கொண்டார்கள் என்பது பொய் என்றால் சரியல்ல. ரீசர்வே எண்ணில் ஏதேனும் தவறுகள் இருந்தால் அதனை ஒரு குறிப்பிட்ட காலத்தில் திருத்தம் செய்ய வேண்டும் எனக்கு மேற்படி ரீசர்வே எண்ணில் எவ்வித உரிமையும் இல்லாததால் காலம் தாழ்த்தி திருத்தம் ஏதும் செய்யாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. ரீசர்வே எண். 273/17 ல் வாதிக்கோ எனக்கோ எவ்வித உரிமையும் இல்லை வாதிகள் எனது குடும்பத்தார் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1, 2 மற்றும் 4 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**